## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

4-ம் பிரிவு 1-வது அத்தியாயம்.

மகாத்மாகாந்தி "நவஜீவன்" பத்திரிகையில் எழுதிவரும் தமது சரிதையில் 4-வது அதிகாரத்தில் முதல் அத்தியாயமாவது:—

### நிறக்காத வேலை.

தென்னாப்பிரிக்காவினின்று 350 லட்சம் பவுன்வரை நிதி வசூலித்துச் செல்வதற்காக ஸர். ஆஸ்டின் சேம்பர்லேயின் அங்கு வந்தார். அவர் ஐரோப்பியர்களுடையவும் போயர்களுடையவும் அன்பைப் பெறவேண்டியிருந்தது. ஆகவே இந்தியப் பிரதிநிதிகள் அவரைப் பேட்டிகண்டபொழுது அவர் ஒன்றும் ஆதரவளிக்கவில்லை.

சுயேச்சை பெற்ற குடியேற்ற நாடுகள் மீது பிரிட்டிஷ் கவர்ன்மென்டிற்கு எவ்வித ஆதிக்கமுமில்லை யென்றும், இந்தியர்களுடைய குறைகள் நியாயமானவைதாகவே காணப்படுகிறதென்றும் தம்மால் இயன்றவரையில் இத்துறையில் முயற்சிப்பதாகவும், ஐரோப்பியர்களிடையே இந்தியர் வசித்தாக வேண்டுமாதலால் ஐரோப்பியர்களை முக்கியமாக இந்தியர்கள் திருப்திப்படுத்த முயற்சிக்க வேண்டுமென்றும் ஸர். ஆஸ்டின் சேம்பர்லேயின் சொன்னார்.

இந்தியப் பிரதிநிதிகளுக்கு இது மிகுந்த ஏமாற்றத்தை யுண்டுபண்ணிற்று. எனக்கும் மிகுந்த ஏமாற்றந்தான். ஆனால் எங்கள் கண்ணைத் திறக்க இது உபயோகமாக விருந்தது. இனி நமது முயற்சியினாலேயே நம் உத்தேசம் நிறைவேற வேண்டுமென அறிந்துகொண்டேன். என் நண்பர்களுக்கும் அவ்விதமே கூறினேன்.

வாஸ்தவத்தைப் பார்க்கப்போனால் மிஸ்டர் சேம்பர்லேயின் கூறியதிலும் ஒன்றும் பிசகில்லை. விஷயத்தைக் குழப்பாமல் வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற தங்கள் கொள்கையை அவர்கள் திட்டமாக வெளியிட்டனர். தங்கள் கத்திப்பலத்தையே அவர்கள் பெரிதென நினைத்தனர். ஆனால் நம்மிடம் பதில் கத்தி கூடவொன்றுமில்லை. கத்தியால் அடிபட தைரிய மோசத்தியோகங்களுக்குக்கிடையாது.

தென்னாப்பிரிக்காவில் ஸர். ஆஸ்டின் சேம்பர்லேயின் கொஞ்ச காலமே தங்கியிருந்தார். டர்பனிலிருந்து கேப்டவன் சுமார் 1100மைல்களிருக்கிறது. இவ்வளவு தூரவிடங்களை வெகு சீக்கிரத்தில் ஸர் சேம்பர்லேயின் சுற்றிப் பார்க்க வேண்டியிருந்தது. நேட்டாலிலிருந்து டிரான்ஸ்வாலுக்குச் சென்றார். அங்கிருந்த இந்தியர்களின் குறைகளையும் நானே ஒருங்குசேர்த்து அவரிடம் தெரிவிக்கவேண்டியிருந்தது. ஆனால் நான் எவ்விதம் பிரிட்டோரியா செல்லக்கூடும்? அக்காலத்தில் நான் அங்குசெல்லுவதற்காக சட்ட அதிகாரத்தைப்பெற சக்தியற்றவர்களாக அங்கிருந்த இந்தியர்கள் இருந்தார்கள். யுத்தத்தின் பயனாக டிரான்ஸ்வால் வெறும் பொட்டலாக மாறிவிட்டது. உண்ண உணவோ உடுக்க ஆடையோ அங்கு கிடைப்பதரிதாகப்போய் விட்டது. கடைகளெல்லாம் பண்டமின்றி மூடப்பட்டிருந்தன. கடைகளில் சாமான்கள் சேருமளவும் எதிரிகளிடமிருந்து பயந்தோடுபவர்கள் கூட அங்கு அநுமதிக்கப்படவில்லை. ஆகையால் டிரான்ஸ்வாலிலிருந்தவர் எல்லோரும் அநுமதிச் சீட்டுப்பெற வேண்டியிருந்தது. ஐரோப்பியருக்கு இதில் கஷ்டமொன்று மிருப்பதில்லை. இந்தியருக்குத்தான் இதில் அதிக கஷ்டத்தை யுண்டுபண்ணிற்று.

யுத்தகாலத்தில் இந்தியா, இலங்கை முதலிய விடங்களிலிருந்து பல உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் தென்னாப்பிரிக்கா வந்திருந்தனர். அங்கேயே ஸ்திரமாகத் தங்க உத்தேசிப்பவர்களுக்குப் பிரிட்டிஷ் அதிகாரிகள் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தது. கவர்ன்மெண்டார் புது உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டிய அவசியமேற்பட்டபொழுது அநுபவம் பெற்ற இவர்களை நியமித்தனர். இந்த உத்தியோகஸ்தர்களை நியமித்ததின் பயனாக ஒரு புதிய இலாகா ஆரம்பிக்கப்பட்டது. நீக்ரோவர்களுக்கென ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்பட்டது. ஆனால் ஆசியாக்காரர்களுக்கென ஒன்றும தவ்விதஏற்பாடு கிடையாது. இந்தியர்களுக்கு அநுமதிச்சீட்டு வேண்டுமென்றால் இவர்கள் மூலமே பெற வேண்டும்.

இந்த இலாகாவிற்கு இந்தியர்கள் மனுச்செய்துகொண்டால் பதில் வர பல தினங்கள் பிடிக்கும். இதனால் டிரான்ஸ்வாலுக்குத் திரும்பச் செல்லும் இந்தியர்கள் நிரம்ப அதிகமாகப் போகவே நடுவில் தரகுக்காரர்கள் அதிகரித்துவிட்டனர். அவர்கள் உத்தியோகஸ்தர்களுடன் சேர்ந்துகொண்டு ஏழை இந்தியர்களிடமிருந்து காசு பறிக்க வாரம்பித்தனர். வேறு எவ்வித செல்வாக்கிருந்தும் பிரயோசனமில்லாமல் ஒவ்வோர் சமயத்தில் 100-பவுன் வரையில் இந்த அநுமதிச் சீட்டிற்காகப் பணம் கொடுக்கவேண்டியிருந்தது. ஆகையால் எனக்கு அங்கு சுலபமாக அநுமதிச்சீட்டுக் கிடைக்கும் வழியில்லை. என்னுடைய பழைய நண்பரான டர்பன் போலீஸ் சூபரின்டெண்டெண்டிடம் சென்றேன். நான் டிரான்ஸ்வால் வாசியாக விருந்ததை அவருக்கு ஞாபகப்படுத்தி அந்த உத்தியோகஸ்தரிடமிருந்து ஒரு அநுமதிச் சீட்டு எனக்கு வாங்கித்தர வேண்டுமென்று அவரை நான் கேட்டேன். உடனே அவர் என்னுடன் புறப்பட்டு வந்து எனக்கு ஒரு அநுமதிச் சீட்டு வாங்கிக்கொடுத்தார். நான் செல்ல வேண்டிய வண்டி புறப்பட ஒருமணி கூட இல்லை; ஆனால் என் மூட்டைகள் தயாராகவிருந்தன. அலெக்ஸாண்டரென்ற அந்த சூபரின்டெண்டெண்டுக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டு நான் பிரிட்டோரியாவுக்குப் புறப்பட்டேன்.

இந்தியர்களின் கஷ்டங்களென்னவென்பதைச் சுமாராகவறிந்தேன். அதன் பேரில் ஒரு மகஜரைத் தயாரித்தேன். இந்தியப் பிரதிநிதிகளின் பெயர்களை முன்னதாகத் தெரிவிக்க வேண்டுமென்று டர்பனில் சொன்னதாகத் தெரியவில்லை. ஆனால் இங்கு அந்தப் புதிய இலாகா வேலை செய்து வந்தபடியால் அவ்விதம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டது. என்னை விலக்க உத்தியோகஸ்தர்கள் உத்தேசித்திருந்தனரென்பதைபிரிட்டோரியா இந்தியர்கள் அறிந்துகொண்டனர்.

ஆனால் இதற்கடுத்தாற்போல் கூற வேண்டிய விஷயம் மனவருத்தத்தை யுண்டுபண்ணக்கூடிய தாதவுமிருக்குமாதலால் அதை ஒரு தனி அத்தியாயமாக நான் எழுத உத்தேசிக்கிறேன்.

### அழுகின்ற மாமரம்.

கல்கத்தாவில் அழுகின்ற மாமரம் ஒன்றிருக்கிறது. இதைப்பற்றி ஸர். ஜே. ஸி. போஸ் தமது நூல்களிலொன்றில் குறிப்பிட்டிருக்கிறார். இது நன்றாக வளர்ந்தமரமென்றும் 39 அடி உயரமிருக்கிறதென்றும் சுற்றளவு 38 அங்குலம் இருக்கிறதென்றும் அதனுடைய கிளைகளும் தழைகளும் 40 சதுர மீட்டர் விஸ்தீரணம் வியாபகமுடையனவைகளாக இருக்கின்றன வென்றும் பிரதிதினமும் ஒரு மணிக்கு இந்தமரம் அழ ஆரம்பிக்கிறதென்றும் ஆரம்பத்தில் கண்ணீர் அதிகமாக வடிகிறதென்றும் இரண்டு விநாடிகளுக்கு ஒரு துளி விழுகிறதென்றும் பின்னேரம் ஆக ஆக சுருக்கமாக விழுகிறதென்றும் தினப்பிரதி இவ்வாறு நடைபெறுகிறதென்றும் அவர் சொல்லியிருக்கிறார். இதொரு கெட்ட சகுனமென ஜனங்கள் கருதியிருக்கிறார்கள்.

## தக்ஷண நாடார் மகமைப் பரிபாலன சங்கம், தூத்துக்குடி.

## 4-வது ஆண்டு நிறைவு விழா.

தக்ஷண நாடார் மகமைப் பரிபாலன சங்கத்தின் 4-வது ஆண்டு நிறைவு விழா திருநெல்வேலி வக்கீல் ஸ்ரீமான் வி. சுப்பிரமணிய நாடார் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் 7-5-27-ல் இனிது நடைபெற்றது. ஸ்ரீமான் அரிகிருஷ்ண நாடார் அவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடக் கூட்டம் ஆரம்பித்தது. காரியதரிசியின் அறிக்கை வாசிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீமான் ஆ. அருள் தங்கையா நாடார் "உயர்ந்தவர் உயர் நிலை" என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அச்சொற்பெருக்கில் ஒழுக்கம், அரியசெயல்செய்தல், குன்றுவ செய்யாமை, தாழ்மை, பிறர்க்குப் பயன்படுதல் ஆகிய அருங்குணங்கள் படைத்தாரே உயர்ந்தவரென்றும், அன்புடைமை, உலக நடையறிதல், டிரனமுடைமை, வசையொழிய வாழ்தல் ஆகிய குணங்கள் உயர்ந்தவரது உயிர் நிலையாகுமென்றுங் கூறினர். ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடார், நாடார்களின் தேவை கல்வி யென்றும், மகமையின் ஆதரவில் கல்விச் சங்கங்கள் ஏற்படுத்திக் கல்விக் குறைவைப் போக்க வேண்டுமென்றும் சொன்னார். இட்டமொழிக் கலாசாலைத் தலைவர் ஸ்ரீமான் துரைச்சாமி நாடார் பி. ஏ எல். டி., இட்டமொழிக் கல்லூரி ஸ்ரீமான் ஜோசப் நாடார் அவர்களால் பொது நன்மையைக் கருதி ஏற்படுத்தப்பட்டதென்றும், இதுபொழுது போதிய பணமில்லாது நடைபெறுதற்கு முடியாத நிலையிலிருக்கிறதென்றும், அதற்கு மகமை நிதிகளிலிருந்து உதவி செய்தல் வேண்டுமென்றும் கூறினர். ஸ்ரீமான் வி. துரைச்சாமி நாடார், மகமை நிதிகளின் உபயோகத்தைப் பற்றி விரிவாய் எடுத்துரைத்தார். ஸ்ரீமான் டி. எஸ். டேவிட் நாடார், சில பேட்டைகளின் ஒழுங்கீனமான நிலைமையையும், அவற்றை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுவதின் அவசியத்தைப் பற்றியும் அழுத்திச் சொன்னர்.

பின்னர் ஏ வி. பால் நாடார் அடியிற்கண்ட தீர்மானத்தைப் பிரேரித்தார்.

தீர்மானம்:—எல்லாப் பேட்டைகளிலிருந்தும் இட்டமொழி ஏ. வி. ஜோசப் நாடார் கல்விச் சாலைக்கு வருஷந்தோறும் அந்தந்தப் பேட்டை நிதிக்கு இயன்ற அளவு பணம் கொடுத்து உதவும்படி இந்தப் பொதுக் கூட்டம் தீர்மானிக்கிறது. (தீர்மானம் ஸ்ரீமான் எஸ். ஓ. தங்கவேல் நாடாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.)

பின்னும் ஒரு தீர்மானம் ஸ்ரீமான் ஏ. வி. பால் நாடாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான் டாக்டர் ஞானமிர்தராஜ் நாடாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

தீர்மானம்:—தூத்துக்குடிப் பேட்டை நிதியிலிருந்து மாதமொன்றுக்கு 10 ரூபாய்க்குக் குறையாமல் ஏ. வி. ஜோசப் நாடார் கலாசாலைக்குக் கொடுத்துவரும்படி இப்பொதுக் கூட்டத்தார் நிர்வாக சபையைக் கேட்டுக் கொள்கிறார்கள்.

பின்னர் தலைவர் அவர்கள் முடிவுரையாக, அறிவாற்றலில் பிற குலத்தவருக்கு எவ்வகையிலும் குறைந்தவராகாத நாடார்கள் கல்விக் குறையாலும், பொறுமை, அன்பின்மை முதலியவற்றாலும் தங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் அமைத்துக் கொள்ளக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். தேர்தல் காலங்களில் கிறிஸ்தவர், இந்துக்கள் என்ற தனித் தொகுதிப் பாகுபாடு கேடு விளைக்கின்றது. பேட்டைகளைப் பற்றிய அறிக்கை தயாரித்தல் வேண்டும். பகிரங்கமான முறையில் பேட்டை விஷயங்கள் நடைபெறுதல் வேண்டும் என்று சொன்னர்.

தலைவரவர்களால் அடியிற்கண்ட தீர்மானம் பிரரேபிக்கப்பட்டு நிறைவேறியது.

## நல்ல ராஜா.

மகாத்மா காந்தி மைசூரிலுள்ள நந்தி மலைக்குவரும் முன்னர் பம்பாய்ப் பகுதியிலுள்ள அம்போலிக் குன்றில் சாவந்தவதி யென்ற சிறிய நாட்டின் மன்னரின் விருந்தினரா யிருந்தார். அந்த மன்னர் தருமாராஜராம். அவர் ஐரோப்பாவுக்குச் சென்று கல்வி கற்று வந்தவராயினும், தமது நாகரீகத்தில் நல்ல பற்றுடையவராய் ஆடம்பரமற்ற அன்பு வாழ்க்கை நடத்துகிறாராம். பெரிய தெய்வ பக்தர். குடிகளைத் தகப்பன்போல ஆதரிக்கிறாராம். அவர் ஒரு அரசராயிருந்தும் தமது செலவுகளுக்காக மாதம் 2500 ரூபாய் மட்டுமே எடுத்துக்கொள்கிறாராம். அவர் அந்தப் பணத்தைக் கொண்டு பல ஏழைப் பிள்ளைகளையும் ஆதரிக்கிறாராம். அவர் மனைவியான ராணியும் பர்த்தாவுக் கேற்ற பதிவிரதையாக விளங்குகிறாராம். அவர் நகையே அணிந்து செல்வதில்லையாம். அவர்கள் கதரைப் பெரிதும் ஆதரிக்கிறார்களாம். அரசர் இங்கிலாந்தில் ஐந்தாண்டு வாழ்ந்திருந்தபோதும் மது வருந்தவில்லையாம். மெசபொத்தோமியாவுக்குப் போன பொழுது அதில் சிறிது பழகினாராம். ஒருநாள் அவர் வேலையாட்களில் இருவர் மது வருந்தி மயக்கத்தில் இருப்பதைக் கண்டு அவர்களைத் தள்ளிவிட்டாராம். பின் தாமே மது அருந்துகிறபொழுது வேலையாட்களைத் தண்டிப்பது எவ்வாறு நியாயமாகுமென்று கருதி அவரும் மது அருந்துவதை முற்றிலும் ஒழித்துவிட்டாராம். 125 கிராமங்களைக் கொண்ட இந்தச் சிறிய ராஜ்யத்தை ஆளும் மன்னரின் பெருங் குணங்களைப் புகழ்ந்து மகாத்மா காந்தியின் காரியதரிசியான ஸ்ரீமான் மகாதேவ தேசாய் எழுதியிருக்கிறார்.

தீர்மானம். தக்ஷண நாடார் பேட்டைகளை இதுவரையும் நிர்வகித்து வந்த கனவான்களுக்கு இக்கூட்டத்தார் நன்றி கூறுகிறார்கள். ஸ்ரீமான் ஆதித்த நாடார் அவர்கள் தனித்தேனும், சிலரைச் சேர்த்தேனும் பேட்டைகளின் தற்கால நிலைமையும், அவை இனிமேல் நிர்வகிக்கப்பட வேண்டிய முறைகளையும் பற்றி ஒரு ரிப்போர்ட் தயாரிக்க வேண்டுமென்று இம்மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

கடைசியாக ஸ்ரீமான் ஏ. வி. பால் நாடார் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் கலைந்தது.

அ. அருள்தங்கையா நாடார்.

## தமிழ் புக் கீப்பிங்

விலை ரூபாய் 1.

கணக்குவைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களு மடங்கியிருக்கின்றன. அனேக வியாபார இரகசியங்களையு முடையது வியாபாரிகள், மாணாக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுகஞ் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

## போட்டோ காமிரா



இது புதிதாக லண்டன் மாநகரில் கண்டுபிடிக்கப் பட்டது. இதனால் போட்டோ கிராப் படங்கள் பிடிக்க சிறுபிள்ளைகளும் எளிதில் கற்றுக் கொள்வதற்கு என்றே தயார் செய்யப்பட்டது. கற்றுக்கொண்டு மாதம் ரூ 50 முதல் 500 வரை சம்பாதிக்கலாம். புகைப்படம் பிடிக்கும் ரகசியங்கள் காமிராவுடன் சேர்த்து அனுப்பப்படும். விலை ரூ 3-8-0

(ரூபாய் மூன்று அணா எட்டு)

கிடைக்குமிடம்:—HART & Co
Coimbatore, (S. India)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நகையணிவதேன்?

### ஓர் இந்திய சகோதரியின் அபிப்பிராயம்.

ஜெர்மனியில் பிரசுரிக்கப்படுகிற பத்திரிகையில் சில வாரங்களுக்கு முன் ஒரு சிருபர் ஜப்பான் தேசத்தில் குழந்தைகள் சரியாக வளர்க்கப்படுகின்றன வென்றும் இந்தியா தேசத்தில் பெண் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் பட்டினியாவது இருந்து கொண்டு நகைகளைச் சமத்தினபோதிலும் அவை சரியாக வளர்க்கப்படுகின்றன வென்று கருத முடியாதென்றும் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். இச்சமாதிரி அபிப்பிராயத்திற்கு அவர் சொல்லும் காரணங்கள் என்ன வென்றால், குழந்தைகள் பிறக்கும்போதே அவைகளுக்கு வதுப்பு விவாகம் இவைகளைப் பற்றின விஷயங்கள் தான் புகட்டப்படுகின்றன. ஆறுவயதானவுடனேயே பெண் குழந்தைகளுக்கு விவாஹம் செய்விக்கிறார்கள் என்பதே. அவருடைய மற்ற அபிப்பிராயங்கள் ஒரு புறமிருக்க நகைகள் விஷயமாய் அவர் சொல்லும் அபிப்பிராயம் குறிப்பிடத்தக்கது.

மேல்நாட்டு ஸ்திரீகளுக்கும் நம்தேச ஸ்திரீகளுக்கும் ஒரு வித்தியாஸம் உண்டு. மேல் நாடுகள் குளிர்ச்சியுள்ள தேசங்கள். அத்தேசங்களில் சீதோஷ்ண நிலைமை தேஹாரோக்கியத்திற்கு அனுகூலமாகவிருக்கிறது. அத்தேச ஸ்திரீகளும் தேகப்பயிற்சியும் வெளி ஸஞ்சாரமும் செய்வதனால் அவர்களுக்கு தேஹாரோக்யமும் தேஹ வளர்ச்சியும் நன்றாக விருக்கின்றன. அவைகளால் உண்டான அழகே அத்தேசத்தில் மதிக்கப்படுகிறது. நம் தேசம் உஷ்ணதேசம். சூர்யோதயம் முதற்கொண்டு சூர்யாஸ்தமனம் வரையில் வெயிலில் தலைகாட்ட முடிவதில்லை. இதனால் நம் ஸ்திரீகள் வீடுகளிற் குள்ளேயே அடைபட்டிருக்க வேண்டியிருக்கிறது. அதுவும் தவிர, ஸ்திரீகள் வெளியில் ஸஞ்சாரம் பண்ணும்படியான ஆசாரங்கள் நம்தேசத்தில் சரியானவை யென்று கருதப்படுவதில்லை. ஆனதால் அவர்களுக்கு தேக ஆரோக்கியத்தால் உண்டாகக் கூடிய வளர்ச்சியும் மேல் நாட்டு ஸ்திரீகளுக்கு உண்டான இயற்கை அழகும் இல்லாததனால் பட்டாடைகளாலும் அநேக வர்ணமுள்ள ஆடைகளாலும் நகைகளாலும் செயற்கை அழகு செய்து கொள்ளுகிறார்கள். சரித்திரங்களில் காணப்படும் பூர்வகாலத்திய மேல்நாட்டு ஸ்திரீகளின் படங்களைப்பார்த்தால் அவர்களுடைய தேகத்தில் நகைகளில்லாததும் அவர்களுடைய அவயவங்களின் வளர்ச்சியையும், செழிப்பையும் முக்கியமாகக் காட்டியிருப்பதையும் கவனிக்கலாம். நம் தேசத்திய பூர்வகால ஸ்திரீகளின் படங்களைப்பார்த்தால் அவர்கள் தேஹ முழுவதும் நகைகளால் மூடப்பட்டிருப்பதையும் கவனிக்கலாம்.

நம் தேசத்தில் ஸ்திரீகள் விசேஷமாக நகைகள் அணிவதற்கு இன்னொரு காரணமுண்டு. நம் தேசத்தில் ஸ்திரீகளுக்கு சட்டப்பிரகாரம் புருஷனுடைய சொத்திலாவது பிதாவுடைய சொத்திலாவது பாத்யதை கிடையாது. ஆனால் அவர்களுக்கு அளிக்கப்படுகிற நகைகளின் பேரில் அவர்களுக்குப் பூரண ஸ்வதந்திரமுண்டு. ஆகையால் நகைகள் அவர்களுக்கு ஆஸ்தியாகக் கருதப்படுகின்றன. இக்காரணத்தினால்தான் பூர்வ காலத்திலகூட மாங்கல்யத்தோடு தங்கக்கொடி முதலானதுகள் பெண்களுக்குக்கொடுப்பது ஆசாரமாக இருந்து வந்திருக்கிறது. தற்காலம் கல ஸ்திதியும் பொருள் மதிப்பும் கவனிக்கப்பட்டு விவாஹ காலத்தில் ஸ்திரீகளுக்கு விசேஷமான நகைகள் போடப்பட்டிருக்கின்றன.

இதுவும் தவிர நம் தேசத்தில் அந்நியநாட்டுச் சாமான்கள் விசேஷமாய்ப்பரவி நம்தேசத்திய தொழில்களை அழித்து நம்தேச சாமான்களை ஜாடா ஒழித்து அந்நியநாட்டுச் சரக்குகளின் விலை ரூபமாக நம்தேசத்திய தனம் அந்நிய நாடுகளுக்குச் சென்று விடுகிறது. மஹாத்மாகாந்தி ஜவுளிகள் நூல்கள் மூலமாய் வெளிதேசங்களுக்குப் போகிற ஒரு பாக தனத்தை மாத்திரம் [illegible]

## அந்நிய நாட்டு வர்த்தமானங்கள்.

லண்டனிலுள்ள ருஷிய வியாபார ஸ்தலத்திலும் சோவியத் ஆபீஸிலும் பிரிட்டிஷார் சென்றவாரம் திடீரெனப் போலீஸ் பந்தோபஸ்துடன் வந்து தந்திக்கம்பிகளையும் அறுத்து இவ்வித சமாச்சாரம் வெளிக்குத் தெரிவிக்கப் படாதவாறுள வேலைகளை முன்னக்கூட்டியே செய்து பிரிட்டிஷாருடைய சுவாதீனத்தைவிட்டுப் போயிருக்கக் கூடாத சில ரகசிய தஸ்தாவேஜுக்களின் நகல்களுக்காக சோதனைசெய்தனராம். கிடைத்த தஸ்தாவேஜுக்களையும் எடுத்துக்கொண்டு துப்பாக்கிகள் சிலவைதப் பறிமுதல்செய்துமிருக்கின்றனர். பாதுகாப்பிலிருந்த ஸ்திரீகளையும் 100 பிரிட்டிஷாரையும் வல்லூட்டியாகப் பரிசோதித்தனர். இது 1921 ௵ வியாபார உடன்படிக்கைக்கு விரோதமென்றும் அதிகாரிகளின் வாரண்டைக் காட்டாமலே சோதனை போட்டது சட்டவிரோதமென்றும் ஆக்ஷேபித்து ருஷ்ய தூதர் அந்நிய நாட்டு மந்திரியை கண்டுகொள்ளப் போகிறார்.

* *

நாகரீகம் முதிர்ந்த மேனாட்டிலே ஒரு வெறுக்கத்தக்க சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. மேய் மீ 12௳ ஸர். கிரீமார்தி மாகஸ்வெல் என்பார் 22 வயதுடைய ஒரு பெண்ணை நிர்மானுஷ்யமான காட்டிற் கழைத்துச்சென்று அங்குள்ள மரத்தில் அவளைகட்டி ஆடைகளைக் களைந்துபூட்ஸ்வார்நீலைஷப் பூசிவிட்டு வந்து விட்டாராம். எவ்வளவு நாகரீகமான ஏற்பாடு!

* *

ஜினிவாவில் சென்றவாரம் கூடிய சர்வதேசப் பொருளாதார மகாநாட்டில் கவர்ன்மெண்டார் தொழில்களுக்கு மான்யம் கொடுக்கக்கூடாதென்றும் எல்லா தேசங்களிலும் சாமான்களின் உற்பத்தி சரிசமமாகச் செய்யப்படவேண்டுமென்றும் அதிகப்படியான சுங்கவரிகளைக் குறைக்க வேண்டுமென்றும் சப்கமிட்டிகள் தீர்மானித்திருக்கின்றன.

---

செய்துகொண்டிருக்கும்போது மோட்டார்கார்களாலும் எண்ணெய்களாலும் அநேகவிதமான இதர அனாவசிய சாமான்களாலும்நம்தேசத்தியதனம்பெருவாரியாக வெளிதேசங்களுக்குப்போய் விடுகிறது. இந்த நிலைமையே இன்னும் கொஞ்சகாலம் இருந்து வருமாயின், நம் தேசத்தினுடைய பொருளாதார நிலைமை கவலைக்கிடமாவது திண்ணம். இவற்றையெல்லாம்உத்தேசித்து ஒரு சிறுபாக தனமாவது நம்முடைய தேசத்தில் நிறுத்த வேண்டுமென்ற எண்ணத்தை ஜனங்களுடைய யோசனைக்கு எட்டாமலே பாரதமாதா நகைகள் மூலமாய்ப் பிரசாரம் செய்திருக்கிறாள்.

ஆனால் ஒரு கெடுதல் நம்தேசத்தில் உண்டாயிருக்கிறது. தகுதியில்லாதவர்கள்கூட கடன்வாங்கியும் சொத்துக்களைப் பாராதீனம் செய்தும் நகைகளில் செலவு செய்கிறார்கள். இதுவும் தவிர நாகரீகத்தை யனுசரித்துப் பொடிகளை உபயோகப்படுத்த வேண்டி நகைகளைச் செய்து தங்கத்தின் மாத்துகளும் கொடுக்கின்றனர். இவ்விஷயங்கள் கவனிக்கப்படவேண்டியது அவசியம்தான்.

மேலேசொன்ன விஷயங்களையெல்லாம் கவனிக்கும்போது அமெரிக்கா தேசத்தைப் போலும் மேல்நாட்டு தேசங்களைப் போலவும் நம்தேசத்திலும் தொழில் முறைகள் ஏராளமாக விருத்தியாகி நாட்டின் செல்வமும் இங்கேயே பெருக்கக்கூடிய நிலைமை நம் நாட்டிலேற்படும் வரையில் நகைகள் விஷயமான விரோதமான அபிப்பிராயம் திருத்தப்படுவது உசிதம். சில நாட்களுக்குமுன் பத்திரிகைகளில் ஒரு ஜப்பானிய ஸ்திரீ வியாபாரம் செய்து அநேக கோடிகள் கணக்கில் திரவியம் ஸம்பாதித்து விட்டதாக வெளியிடப்பட்டிருந்தது. நம்மவர் தேசத்தில் அந்தமாதிரியான நிலைமை வகித்துவிட்டால் மாத்திரம் அப்போது நகைகளில் திரவியத்தை முடக்குவது சரியல்ல.

## இலங்கைக் கடிதம்.

(ஒரு நிருபரிடமிருந்து)

### நீதிபதி காலஞ் சென்றார்.

கொளும்பு சுப்ரீம் கோர்ட்டில் புதிதாக நியமனம் பெற்று 6-வது ஜட்ஜியாக விருந்த ஸ்ரீமான் வி. ஜெயவர்தன அவர்கள் சென்ற 20௳ இரவு $10\frac{1}{2}$ மணிக்கு ஹார்ட்டன் பிளேஸில் தமது பங்களாவில் காலகதியடைந்தார். சென்ற சில மாதங்களாக வியாதியாயிருந்தார்.

இவர் லாயராயிருக்கும்போது அவர் அடைந்துள்ள பெருமையினால் இங்கிலாந்து தேசத்து வழக்குகளுக்கு அழைத்துப்போகவும் நேரிட்டதாம். சுமார் 10 வருஷங்களுக்குப் பிற்பாடு இங்கிலாந்திலேயே ஓர் ஜட்ஜ் உத்தியோகத்திற்கு சிபார்சு செய்யப்பட்டதாம். ஆனால் விஷமிகளின் சூழ்ச்சியால் முடியவில்லையாம். சட்ட சம்மந்தமான பல புஸ்தகங்களும் எழுதியிருக்கிறாராம்.

* *

### கவர்னரின் புறப்பாடு.

இலங்கை கவர்னர் மிஸ்டர் ஹியூ கிளிபோர்டு மலேயா நாட்டுக்கு மாற்றப் பட்டுவிட்டார். "ரான்சிங்" என்ற கப்பலில் நாளது மே மீ 23௳ புறப்படுகிறார். 27௳ $6\frac{1}{2}$ மணிக்கு தாம் போகும் சமாச்சாரத்தை குயீன்ஸ் ஹவுஸிலிருந்து பகிரங்கம் செய்வாராம்.

* *

### பட்ட வேட்டை.

அரசர் பிறந்த நாளை முன்னிட்டு பட்டம் கொடுக்கப்படுவது வழக்கம். இது விஷயமாய்ப் பட்ட வேட்டையாட எண்ணங் கொண்டுள்ளவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். தாங்கள் செய்த "அபார ஊழியம்" (?) கவர்ன்மெண்டாருக்கு எங்கு தெரியாது போய்விடுமோ வென்று மகாஜர்கள் எழுதி ஞாபகப் படுத்துகிறார். கையொப்பம் ஒன்றுக்கு 5 சதம், 10 சதம் கிடைக்கிறதாம். அந்தோ! இவ்விதமாகக் காசு கொடுத்து பட்டம் வாங்க வேண்டுமா? இதனால் நாட்டிற்கும், ஏழை மக்களுக்கும் பயன் என்ன? இப்பெரியோர்கள் நாட்டின் க்ஷேமத்திலும், ஏழைகள் விஷயத்திலும் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களென்னவோ தெரியவில்லை. பட்டம்! பட்டம்!!

* *

### வாக்குரிமையும், அரசியல் திருத்தமும்.

இலங்கைக்கு புது சீர்திருத்தம் பல வழங்குவதின் பொருட்டு ராயல் கமிஷன் ஒன்று நியமிக்கப்படப் போகின்றது என்பதை முன்னரே தெரிவித்துள்ளோம். மேடி கமிஷன் விசாரணைக்கு வரும் காலத்தில் வாக்குரிமையைப் பலப்படுத்த கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று பல தேசாபிமானிகளாலும், தேசியப் பத்திரிகைகளிலும் சொல்லப்பட்டும்—எழுதப்பட்டும் வரப்படுகிறது. இலங்கையில் சுமார் $7\frac{1}{2}$ லட்சம் இந்தியர்கள் வசித்து வருகின்றனராம். அதில் 12000 வாக்காளர்களே இருக்கின்றனர். இலங்கை சட்டசபைக்கு "ஓட்" கொடுக்க உரிமை மாதம் 1-க்கு 50 ரூபாய் வருமானம் உள்ளவரும், தமிழ் அல்லது இங்கிலீஷ் படிக்கத் தெரிந்தவரும், இலங்கையிலேயே 6 மாதம் குடியிருந்தவருமானவருக்கே உண்டு. முனிசிபல் மெம்பர் ஸ்தானத்திற்கு "ஓட்" கொடுக்கவிருக்கும் உரிமையை விட இது மிகவும் மோசம் என்று சொல்லப்படுகிறது. 21 வயதுடையவர்கள் எல்லாரும் வாக்காளர் ஆகி விட்டாலும் இலங்கை என்னும் அதிகாரவர்க்க இலங்கையாகவே யிருக்கும். ஜனப் பிரதிநிதிகளின் இலங்கையாக இன்னும் காலமிருக்கிறது. ஆனால் இஃதெல்லாம் எதிர்கால க்ஷேமத்தின் பொருட்டென்றுமட்டும் கூறலாம்.

## திக்கு விஷயம்.

வங்காள சட்டசபையார் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்திற்கேற்ப கவர்ன்மெண்டானது தேகப்பயிற்சியை பள்ளிக்கூடங்கள் தோறும் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டுமென்று, சர்வ கலாசாலையைக் கேட்டிருந்தது. இதன்மேல் சர்வகலாசாலை செனேட் சபை ஒரு சப்கமிட்டியை நியமித்து, ஒரு திட்டம் தயாரித்ததில் மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சியை வற்புறுத்தியது. கவர்ன்மெண்டார் இதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே, ஒரு வருஷத்துக்குக் கட்டாயமாக, மாணவர்களுக்கு வாரத்தில் மூன்று நாளைக்கு கால்பந்து, இந்திய குஸ்தி, கம்பு விளையாட்டு முதலியன கற்பிப்பதென்ற திட்டத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

---

பர்மாவில் நாகமலை யோரங்களில் வசித்துவரும் நாக ஜாதியார்கள் நரனரம் நரபலியைக் கையாண்டுவருகிறார்கள். ஏனெனில் இவர்கள் காட்டுமிராண்டிகளாய் ஒதுக்கமாய் மலைப் பாகங்களில் ஜீவித்து வருவதால் உலகப்பழக்க வழக்கங்களறியாமலும் இதர ஜனங்களின் நடையுடை பாவனைகளைக் கேட்கவோ அறியவோ பார்க்கவோ கூடாமலுமிருந்ததினாலே இவ்விதபலியைக் கையாண்டுவந்தனர். இது விஷயமாய்க் கவர்ன்மெண்டார் சென்ற விவில் உத்தியோகஸ்தர்களிடம் தாங்கள் இனி நரபலி கொடுப்பதில்லை யெனப் பலர் உறுதி கொடுத்திருக்கிறார்களாம். இவர்கள் கதிர் அறுவடைகாலத்தில் கூட்டங்கூடி நர்த்தனம் புரிந்து ஏழு எருமைகளையும் ஒரு காளையையும் பலி கொடுப்பார்களாம்.

---

"அமெரிக்கா" எனும் பத்திரிகை யொன்று மோட்டார்களைப்பற்றி, மதுபானங்களைப் போல ஆண்டவனுடைய கட்டளையும் அரசாங்க உத்தரவுகளையும் மீறிவிட்டதென்றும், விபசாரம், குற்றம் புரிதல், மரணம், திருட்டு ஆகிய அதர்மமான காரியங்களுக்கே முக்கிய சாதனங்களாக விருக்கின்றன வென்றும் இனியும் இவ்வித சாதனம் பெருகுமானால் நாட்டில் அக்கிரமங்கள் பெருகுமெனறும், ஆகையால் இவைகளை எண்ணாவிருத்தியில் குறைப்பதற்கான ஏற்பாடுகள் கவர்ன்மெண்டார் செய்ய வேண்டுமென்றும் அறிவிக்கிறது.

---

திருவனந்தபுரத்திலுள்ள ஸ்ரீ நாராயண தர்மபரிபாலன யோக ஸமிதிகள் சமாஜத்தின் வருடக்கூட்டம் இம்மாதம் முதல் வாரத்தில் ஸ்ரீமதி டி. வி. நாராயணம்மாளின் தலைமையில் கூடி தீயவகுப்புப் பெண்களுக்கென ஒரு ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு கன்னியாமடம் ஸ்ரீ நாராயணகுரு அவர்கள் யோசனைப்படி கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் தீய ஸ்திரீகளுக்கும் உத்தியோகங்கள் கொடுக்க வேண்டுமென்றும் இன்னும் பல ஸ்திரீகள் முன்னேற்றமான தீர்மானங்களையும் தீர்மானித்திருக்கிறது.

---

## தாய்மார்கள் கவனிக்க வேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி, சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால்வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டு வருகிறது. 20 வருடத்து அனுபவம். எம்மதஸ்தரும் வாங்கலாம். அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும். இதன் விலை தபால் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும், தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும்; யந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—

எ. எஸ். எ. மாந்திரீக டாக்டர்,
இனாம்தார் வீடு,
சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம்,
திருச்சி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்

பிரபவ ௵ வைகாசி ௴ ௧௮௨

# நாடார் ஜன சமூகம் எதிர் பார்க்கும் விஷயங்கள்.

நாடார் ஜன சமூக முன்னேற்றத்தில் முதற்படி கல்வி அபிவிருத்தியென்றும், அதில ஏழைப் பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டு வருவதே சங்கத்தில் முதல் வேலை யென்றும், அதற்காகத் திரண்ட நிதி வேண்டுமென்றும் நாடார் மகாஜன சங்கம் விரும்பியவாறு மகாஜனங்களும் கூடிமானவரையும்பிரயாசைப்பட்டு ஏழை மாணவர்கள் சகாய நிதியை ஒருவாறு சேகரம் செய்திருக்கிறார்கள். அந்நிதியிலிருந்து ஏழை மாணவர்களுக்கு இப்போது என்ன உதவி செய்யப்பட்டுவருகிறது?

ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கில் தீர்மானித்தபடி சொத்து வாங்கப் பட்டிருக்கிறதா? சொத்து வாங்க ஏற்பட்ட கமிட்டி இரண்டு விதமான அபிப்பிராயங்கள் கூறிக்கொண்டே போனால் சொத்துகள் எப்பொழுதுதான் வாங்கி முடிவது? அதுவரையும் ஏழை மாணவர்கள் இலவு காத்த கிளி போல் இருந்து தவிக்க வேண்டியதுதானா? சங்க நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிர்வாகிகள் இப்போது என்ன முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்? பிரசாரகர்கள் இப்போது எத்தனை பேர்களிருந்து வேலை செய்கிறார்கள்? சமூக சீர்திருத்தப் பிரசாரம் இப்போதெவ்வாறு நடக்கிறது? அல்லது நடக்க ஏற்பாடு செய்திருக்கிறது?

முக்கியமான பெரிய நகரங்களில் தலைக்கட்டு வரி முற்றிலும் வசூலாகிவிட்டதா? அவ்வேலையை மேற்கொண்ட கமிட்டி இது வரையும் செய்து வந்திருக்கிற வேலைகளென்ன? அயர்ந்திடக்கும் சமூகத்தைத் தட்டியெழுப்புவதற்குப் புதிய முறை ஏதேனும் கண்டுபிடித்திருக்கிறார்களா?

நாடார் சமூக முன்னேற்ற சம்பந்தமாக சங்கம் பிரஸிடெண்டு, வைஸ்பிரஸிடெண்டுகள் என்ன முயற்சி செய்திருக்கின்றார்கள்? என்ன முயற்சி செய்யலாமென்றுதான் அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள்? வைஸ் பிரஸிடெண்டு ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடாரவர்கள் 7-2-27-ல் வெளியான "நாடார்குல மித்திர"னில் நாடார் சமூகத்துக்குத் தெரிவித்த பிரகாரம் இது வரையும் என்ன வேலை செய்திருக்கிறார்கள்?

சென்ற வருடத்தில் லாட்டரி சம்பந்த வேலைக்கும், கான்பரன்ஸ் நடத்தும் வேலைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும், லாட்டரி வேலையே முக்கியமாய் முன் வந்து நின்றதால் கான்பரன்ஸை இவ்வாண்டில் நடத்துவதாகக் கூட்டி வைத்துக் கொண்டோம்; இவ்வாண்டில் அங்கே நடப்பதற்கு என்ன எற்பாடு நடந்துவருகிறது? அது சம்பந்தமாகக் காரியதரிசிகள் இதுவரையும் என்ன முயற்சி எடுத்திருக்கிறார்கள்? இனியாவது தகுந்த முயற்சி யெடுப்பார்களா? திருநெல்வேலியில் நடத்தி வைப்பதாக அழைத்த முக்கூடல் திருவாளர்கள் எக்காரணம் பற்றி அவ்வேலையை மேற்கொண்டு நடத்தாமல் விட்டார்கள்? விட்ட காரணத்தைப்பற்றி காரியதரிசிகள் விசாரணை செய்திருக்கிறார்களா?

மதுரை பால்ய நாடார்கள் சங்கமும், ஊழியப்பிரசார சபையும் இப்போது என்ன வேலை செய்து கொண்டிருக்கின்றன? சமூகவேலை தளர்ந்துவருகிற நேரங்களிலெல்லாம் தட்டியெழுப்பி உற்சாக மூட்டி, உடனிருந்து வேலை செய்வது ஊழியப்பிரசார சபையின் வேலையா, அல்லவா என்ற பற்பல கேள்விகளடங்கிய கடிதங்களும், வியாசங்களும் சமீபமாய் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இதனால் சமூக வேலை அதிதீவிரமாக நடக்கவில்லையே என்ற ஆத்திரமும் தீவிரமாய் நடக்க வேணுமென்ற ஆசையும் ஜன சமூகத்திடையே ஏற்பட்டிருப்பதாக அறிந்து மிகுந்த சந்தோஷமடைகின்றோம். அவைகளை யெல்லாம் பத்திரிகையில் வெளியிட்டு பற்பல அபிப்பிராயங்களுக்கு இடங்கொடாமல் முக்கியமான சிலவற்றை மட்டும் வெளியிட்டு ஜனங்கள் விரும்புகிறபடி மகாஜன சங்க அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

முக்கியமாய் பெரிய நகரங்களில் தலைக்கட்டு வரி வசூலித்தல், திருநெல்வேலியில் கான்பரன்ஸை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தல், இல்லேல் மதுரையிலாவது நடத்தி வைத்தல், ஏழைமாணவர்களுக்குக் காலதாமதஞ் செய்யாமல் ஸ்காலர்ஷிப் கொடுத்தல் முதலிய வேலைகளில் காரியதரிசிகள் உடனே கவனஞ் செலுத்த வேண்டுகிறோம்.

பால்ய நாடார் சங்கமும், ஊழியப்பிரசார சபையும் சங்கம் உத்தியோகஸ்தர்களுடன் எப்போதும் போல் ஒத்துழைக்கு கான்பரன்ஸ் சிறப்பாக நடைபெறவும், சமூக வேலை திறமாய் நடக்கவும் வேண்டிய ஏற்பாடு செய்ய விரைவாகவும், ஊக்கமாகவும் முன்வருமென்று நம்புகிறோம். நாடார் சமூகம் தற்போது எதிர்பார்க்கும் விஷயங்களும் மேற்கூறியவை களேயாம்.

அருப்புக்கோட்டையில் கான்பரன்ஸ் ஏன் நடத்தக் கூடாதென்று மதுரை நிருபர் ஒருவர் எழுதியுமிருக்கிறார். இவ்வூர் வாலிபர்களுக்குள்ளும் சில முக்கியஸ்தர்களுக்கும் கான்பரன்ஸ் நடத்திவைக்க வேண்டுமென்ற பரபரப்பு இல்லாமலில்லை. ஆனால் சில தடைகளுமிருக்கின்றன. ஆண்டவன் கிருபையால் அடுத்த வருஷத்திலாவது நடக்கலாமென்று நம்புகின்றோம்.

# குறிப்புகள்.

## சுயராஜ்யக் கட்சியும், ஜஸ்டிஸ் கட்சியும்.

சென்னைச் சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியார் மெஜாரிட்டி ஸ்தானம் பெற்றதும், ஜஸ்டிஸ் கட்சிக்கு 17 ஸ்தானங்களே கிடைத்தன வென்று "சுதேச மித்திரன்" முதலிய பத்திரிகைகள் வெளியிட்டுக் கொண்டாடினதும், கௌஹாத்திக் காங்கிரஸ் அக்கிராசனப் பிரசங்கத்தில் சென்னையில் வகுப்புவாதம் ஒழிந்ததும், வகுப்புவாதத்தை ஜனங்கள் ஆதரிக்கவில்லையென்று ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் பெருமை பேசிக் கொண்டதும் உலகமறிந்த உண்மை. இவ்விதமிருக்க சென்னைச் சட்டசபையில் மந்திரிகள் சம்பளத் தீர்மானத்தை காக்வேஷன் செய்யக் கூடாதென்று மிக மிக மைனாரிட்டிக் கட்சியான ஜஸ்டிஸ்கட்சியார் தீர்மானங் கொண்டு வந்தபோது அவர்களைப் பார்க்கிலும் அதிக மெம்பருள்ள தற்கால மந்திரி கட்சியான சுயேச்சை வாதிகளே எதிர்த்து ஓட்டுச் செய்திருந்தாலும் தோற்றுப் போயிருக்க வேண்டியதே நியாயமல்லவா? சட்டசபையில் நடந்ததென்ன? சுயராஜ்யக் கட்சியார் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிரிடையாக ஓட்டு கொடுத்துத் தீர்மானம் தோல்வியுறச் செய்தார்கள். இதனால் இரட்டையாட்சியை நடைபெற முடியாமல் முட்டுக் கட்டை போடுவோமென்று ஓட்டர்களுக்கு வாக்களித்த சுயராஜ்யக் கட்சியார் இரட்டை யாட்சி உரமாய் நடைபெறத் துணை செய்து விட்டதோடல்லாமல் தாங்கள் செய்தது நியாயமென்றும், தாங்கள் அவ்விதஞ் செய்யாத பக்ஷத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் ஜெயித்துவிடுவார்களென்றும், தற்போதைய மந்திரி சபை கலைந்துபோய் பழையபடியும் பனகால் கோஷ்டியாரே மந்திரிபதவிபெறுவார்களென்றும், அந்த அபாயத்திலிருந்து சென்னை மாகாணத்தைக் காப்பாற்றிவிட்டதாகவும், ஸ்ரீமான்கள் சாமி வெங்கடாசலமும், சத்தியமூர்த்தியுஞ் சொல்லுகிறார்கள். இதென்ன வெட்கக்கேடு! 17 பேருள்ள ஜஸ்டிஸ் கட்சியார் சுயராஜ்ய, சுயேச்சைவாதிகளான சுமார் 75 பேர்களை ஜெயித்துவிடுவார்களா? சுயராஜ்யக் கட்சியார் சிலர் ஓட்டுக் கொடாமலிருந்து விட்டதாகவும் தெரிகிறது. எவ்விதமாகவோ சுயராஜ்யக் கட்சியார் தற்கால மந்திரியாகிய டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய ஆதரிக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. சத்தியமூர்த்தியின் விருந்துக்கு சனம் மந்திரி விஜயஞ் செய்ததற்கு எத்தனை காரணங்களை வக்கீல் வாதமாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி எடுத்துச் சொன்னாலும், உண்மை எப்படியோ ஜனங்களை வசியஞ் செய்து வருகிறது. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியை யாதரிக்க சட்டசபையில பலர் தயாராய் விட்டதாக நினைக்க வேண்டியதிருக்கிறது.

## ஜஸ்டிஸ் கட்சியும், மந்திரி பதவியும்.

சுயேச்சை வாதிகள் தோல்வியுற்று ஜஸ்டிஸ் கட்சியாரை மந்திரி சபை யமைக்கும்படி கவர்னர் கேட்கிறாரென்றே வைத்துக்கொள்வோம். 17 பேர்களுள்ள ஒரு கட்சி மந்திரி சபையமைத்து நடத்த முடியுமா? முடியாதென்பதைச் சாதாரண புத்தியுள்ளவர்களும் ஒப்புக்கொள்வார்கள். அவ்விதம் அமைத்தாலும் சுயராஜ்யக் கட்சியார் ஒரே நாளில் தொலைத்து விடலாமன்றோ? இவ்வித யோசனையெல்லாம் நமது வக்கீல் நிபுணராகிய சத்தியமூர்த்திக்காவது மற்றைய சுயராஜ்யக் கட்சியாருக்காவது தெரியாமலிருக்குமா? தெரியத்தான் செய்யும். நடித்து நடக்க வேண்டியதுதெரியும். ஜஸ்டிஸ் கட்சியார் முடியாதென்று சொல்லிவிடுவார்கள். அடுத்தபடியாகத் தாங்களும் முடியாதென்று சொல்ல வேண்டியதே கௌஹாத்திக் தீர்மானத்தின் கருத்தும். உடனே சபை கலைக்கப்பட்டுவிடும்.

## மறு எலெக்ஷன்.

எப்போது மந்திரி சபையமைக்க முடியாத நிலைமை ஏற்படுகிறதோ, அப்போது கவர்னரே தம்முடைய அதிகாரத்தைக் கொண்டு மாற்றப்பட்ட இலாக்காவையும் நிர்வகித்து வர வேண்டும்; அல்லது சபையைக் கலைத்துவிட்டு மறு எலெக்ஷனுக்கு உத்தரவு செய்ய வேண்டும். மறு எலெக்ஷன் நடந்தால் சுயராஜ்யக் கட்சியின் கதி என்னவாகுமென்று நாம் சொல்ல வேண்டியதே யில்லை. முன்போல ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் வந்து, சுயராஜ்யக் கட்சியார் சட்டசபையில் வந்தவுடன் குடியொழிந்துபோகுமென்று நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கவுமாட்டார்; கொடுத்தாலும் ஜனங்கள் நம்பமாட்டார்கள். ஏன்? மதுவை ஒழிக்க முடியாது; ஒழித்தால் 5 கோடி ரூபாய் வருமானம் போய்விடும்; அதற்கு ஈடு செய்யவும் முடியாது என்று சுவால் மந்திரி பத்ரோயாய்ச் சொல்லிவிட்ட பிறகும் சுயராஜ்யக் கட்சியார் அந்த மந்திரி சபையையே ஆதரித்ததை மறக்கப்போக முடியுமோ? ஜஸ்டிஸ் மந்திரிகள் இந்த வார்த்தையையே சொல்லியபோது மிகுந்த ஆர்ப்பாட்டஞ் செய்து பெரிய கொட்டை எழுத்துக்களில் தலைப்புக்கட்டி வெளியிட்ட "சுதேச மித்திரன்" பத்திரிகை சுயராஜ்யர் கட்சியார் சென்னை சட்டசபையில் நடந்து கொண்டதை ஆதரிப்பதையும், அதற்குச் சமாதானம் வரையுமளவுக்கு தன்னுடைய சக்தியை யெல்லாம் உபயோகிப்பதையும் பார்த்து பிராமணரல்லாத ஓட்டர்கள் மௌனமாய் போவார்களா? இவ்வித நிலைமையில் எலெக்ஷன் நடக்குமானால் சுயராஜ்யக் கட்சி யென்ற ஒரு கட்சி சென்னை மாகாணத்தில் இருந்த இடங்கூடத் தெரியாமல் மாண்டுபோய்விடுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதையறிந்து தான் காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்காரவர்களும், செக்ரட்டேரி ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்காரவர்களும், சென்னை சுயராஜ்யக் கட்சி உப தலைவர் சத்தியமூர்த்தி அய்யரவர்களும் வெகு பிரயாசையுடன் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கங்களுக்குள்ள செல்வாக்கைக் கொண்டு நற்சாட்சிப் பத்திரம் பெற்றுக் கொண்டதுமாகும்.

## தேச மக்கள் செய்ய வேண்டியதென்ன?

தேசம் சுயராஜ்யமடைய மகாத்மா காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தை நடத்திவைக்க முயற்சி செய்வதோடு அதிலிட்டத்தை உண்மையான சிரத்தையோடு நடத்துவது ஜஸ்டிஸ் கட்சியானாலும் சரி, அல்லது பூர்ண ஒத்துழையாதாரானாலும் சரி அவர்களுடன் சேர்ந்துழைத்து, சட்டசபை யென்னும் குதாட்டக் கூட்டத்துக்குப் பணத்தைச் செலவழித்துப் பாழாக்காமல் சகோதரத்துவ தர்மத்தை வளர்த்து ஒற்றுமையடைந்தால், சுயராஜ்யம் நம்மிடம் தேடிவருமென்பதற்கையமில்லை.

## வகுப்பு வாதம் ஒழிந்ததா?

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைத் தீர்மானம் வந்தபோது மௌலானா முகம்மதலி ஆதரிக்கு முகத்தால் "காங்கிரஸ் தலைவர் மிக்க வைராக்கியத்துடன் பாடுபட்டு சென்னையில் பிராமணர், பிராமணரல்லாதாருக்கிடையே ஒற்றுமையை உண்டு பண்ணியதைப் போல ஹிந்து முஸ்லீம்களுக்கிடையிலும் ஒற்றுமை யேற்பட வழி தேடியிருக்கிறார்" என்று சுதேச மித்திரனில் வெளியாயிருக்கிறது. இதைப் படித்த சென்னை மாகாண பிராமணரல்லாதார் ஒவ்வொருவரும் வயிறு குலுங்க நகைத்திருப்பார்கள். மௌலானா முகம்மதலி சென்னைப் பத்திரிகைகளைப் படித்திருந்தாலும், சென்னை மாகாணப் பிராமணரல்லாதாரிடையே பிரயாணஞ் செய்து அவர்களுன்னத்தை அறிந்திருந்தாலும் இவ்விதஞ் சொல்லியிருக்கவே மாட்டார். ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்காரின் அக்கிராசனப் பிரசங்கம் தவிர வேறொன்றும் அவர் ஞாபகத்திற்கு வருவதில்லையோ? அல்லது வேணுமென்றே சொல்லப்பட்ட...

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# மங்கையரின் சங்கட நிலைமை.

## கல்கத்தாவில் பயங்கர சம்பவம்.

## ஸ்ரீகட்காபகதூர் சிங்கின் வீரச்செயல்.

கல்கத்தாவினின்று வெளிவரும் "மாடர்ன் ரெவ்யூ" என்ற ஆங்கில மாதாந்தசஞ்சிகையினின்று மொழி பெயர்த்தது பின் வருமாறு:—

இராஜகுமாரி மாயா என்னும் பெயர் படைத்த நேபாள தேசத்தவளும், நேபாள அரச ஜாதியைச் சேர்ந்தவளுமான ஓர் மங்கையை அவளுடைய பாட்டியார், பாதம்பிரசாத் என்பவர் ஒருவருக்கு அவர்க்குப்படியாகக் கொடுத்திருக்கனர். பாதம்பிரசாத் என்பவர் அப் பெண்ணை ஹிராலால் ஹக்ரவாலா என்னும் கல்கத்தா பிரபல வியாபார தனவந்தர் ஒருவருக்கு விற்றுவிட்டார். இவரும் இவருடைய தீய ஒழுக்க நண்பர்களும் கூடி இவண் பேச முடியாத அநேக விதத் துன்பங்களை இராஜ குமாரிக்கு உண்டாக்கியிருக்கின்றனர்.

இராஜகுமாரி ஹிராலாலின் வீட்டினின்றும் தப்பியோடி போலீஸாரின் ஆதரவை நாடியிருக்கின்றாள். ஆனால் போலீஸாரோ அவளுக்கு ஆதரவு செய்யாமல் நிம்மதியாயிருந்து விட்டனர். ஹிராலாலும், அவரது நண்பர்களும் செய்த துன்பத்தால் அவளது தேகம் மெலிவுற்றிருந்தது. அதன் காரணத்தால் பெண் மக்களுக்கென்று நிர்மாணிக்கப்பட்டுள்ள ஓர் வைத்திய சாலையை அவள் நாட வேண்டியதாயிற்று. பீ. ஏ. பட்டம் பெற்றவரும், நேபாள அரச ஜாதியைச் சேர்ந்தவருமான "கட்காபகதூர்சிங்" என்பவரின் காதுக்கு இம் மங்கையின் சங்கடமான நிலைமை எட்டியது. இச்செய்தியைச் செவியுற்றதும் அவருடைய இரத்தம் கொதிக்கத் தொடங்கியது. இராஜகுமாரி விஷயத்தில் ஹிராலால் எவ்வண்ணம் நடந்து கொண்டாரோ அவ்வண்ணம் ஹிராலால் விஷயத்தில் தாமும் நடந்து கொள்ள வேண்டுமென்று சிங் தீர்மானித்தார்.

அத் தீர்மானத்துடன் சிங் என்பவர் ஹிராலாலின் ஆபீசுக்குச் சென்று கையில் வைத்திருந்த ஒரு வித ஆயுதத்தால் அவரை பலமாய் அடித்தார். ஹிராலால் மரணமடைந்தார். கட்காபகதூர் சிங் உடனே கைது செய்யப்பட்டார். அப்புறம் அவர் கல்கத்தா பிரதம நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ கிரிகோரி முன்பில் விசாரணைக்கனுப்பப்பட்டார். சாட்சிகள் எல்லாரும் விசாரிக்கப்பட்டுள்ள பின்னர் "நீர் ஏதாவது சொல்ல விரும்புகிறீரா?" என்று நீதிபதி "சிங்" கைப்பார்த்துக் கேட்டனர். அவ்வமயம் ஸ்ரீமான் சிங் வாக்குமூலம் கொடுத்தது பின் வருமாறு:—

"நான் ஹிராலால் ஹக்ரவாலா என்னும் கல்கத்தா தனவந்தன் ஒருவனைக் கொலை செய்தேன் என்னும் குற்றஞ் சாட்டப்பட்டு இவ்விடத்தில் கொணடு வந்து நிறுத்தப்பட்டுள்ளேன். என்னுடைய 13 வயது பிராயத்திலேயே நான் சாக உணவுகளை (மரக்கறி பதார்த்தங்களை) உண்பவனாக மாறிவிட்டேன்.

நான் எனது இளம்பிராயம் தொட்டு அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடித்து நடந்துவருகிறேன். மேலும் மகாத்மா காந்தியடிகளின் அஹிம்சா தர்மத்தின் படியும் நடந்துவருகிறேன். இம் முறையைக் கடைப்பிடித்த ஒருவன் கொலை செய்தான் என்பது பிரமிப்படையத்தக்கதும், நம்பிக்கையற்றதுமாகக் காணப்படும். ஆனால் அதன் காரணங்களை நீங்கள் அறிவீர்களானால் உங்களுக்கு இந்த பிரமிப்பை யளிக்காது. இதன் காரணங்களைக் கூறுவதற்கு முன் என்னுடைய முன் விஷயங்களையும், இப்போதுள்ள விஷயங்களையும் எடுத்துக் கூற ஆசிக்கிறேன்.

ஐக்கிய மாகாணத்தில் டேராடூன் என்னும் நகரில் பேர் பெற்ற ஒரு கூர்க்கர் குடும்பத்தில் நான் பிறந்தவன். டேராடூன் கலாசாலையில் படித்து மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறினேன். அப்பால் டாக்கா சர்வகலாசாலையில் எப். ஏ. பட்டம் பெற்று சென்ற வருஷத்தில்தான் பீ. ஏ. பட்டதாரியானேன்.

பிரஸ்தாப சம்பவம் நடந்த சமயம் நான் கல்கத்தா கூர்க்க சங்கத்தின் ஆர்டிங் கௌரவ காரியதரிசியாயிருந்தேன். தன்னுடைய தாய் உதித்த ஜாதியைச் சேர்ந்த கண்ணியவான்கள் ஒவ்வொருவரும் எங்ஙனம் அந்த ஜாதியின் விஷயமாய் நடந்துகொள்ள வேண்டுமென்பதை எடுத்துக் கூற இந்நிகழ்ச்சி ஒரு சந்தர்ப்பத்தை எனக்கு நல்கி இருக்கிறது.

### பயங்கர சம்பவம்.

வர்த்தமானப் பத்திரிகைகளில் இராஜ குமாரியைப்பற்றி எழுதப்பட்ட விஷயங்களைக் கண்டபோது என்னுடைய சங்கத்தார் அவ்விஷயமாய் தங்கள் கவனத்தைச் செலுத்தலானார்கள். நான் அச் சங்கத்தின் காரியதரிசி பதவி வகித்தமையால் இது பற்றி விசாரணை செய்ய ஆரம்பித்து, இராஜகுமாரி இருக்கும் இடம் அறிந்து அவள் மூலமாய் சகல விஷயங்களையும் நாளடைவில் அறிந்து கொண்டேன். அவள் சொன்னவைகள் வெட்கம், அவமானம், இரத்தக் கொதிப்பு இவைகளை உண்டாக்கின. கோரமான காட்சிகளைத் தன் இருதயத்தில் கொண்டவைகளாகவும் இருந்தன. பிரஸ்தாப விஷயங்களைத் தற்பொழுது கூட இரவில் நினைத்துக் கொண்டால் திடுக்கிடச் செய்கிறது. அவை ஆற்ற முடியாக் கோபத்தையும் உண்டாக்குகின்றது.

### தனவந்தரின் அக்கிரமம்.

கனம் நீதிபதியவர்களுக்கு நடந்த விஷயங்களில் ஒரு பாகம் மட்டும் தெரிந்திருக்கிறது. மற்றவை தெரிய வராது. நானும் இது சமயம் அவைகளை எடுத்துரைக்கப்போவதுமில்லை. கல்கத்தாவிலும், மற்றும் ஏனைய இடங்களிலும் வதியும் செல்வந்தர்களும், பெருமை படைத்தவர்கள் என்று கருதப்படுகிறவர்களுமே ஹிராலால் செய்துள்ள அக்கிரமச் செய்கைக்கு ஆதாரவாயிருந்திருக்கிறார்கள் என்று இப்பொழுது கூறுகிறேன். பொது ஜனங்கள் இவ்விஷயத்தை அறிந்து கொள்வார்களாக. இது சமயம் தப்புவித்துக் கொண்டோம் என்று அவர்கள் இன்புற்றிருக்கக் கடவர். ஒரு காலம் வரும். அவ்வமயம் அன்னவர்களது கொடும் செய்கைகள் எல்லாம் வெளியாகிவிடும்.

### ஹிராலாலை அடித்ததற்குக் காரணம்.

1. இராஜகுமாரியை பலவந்தமாய் எடுத்துச் சென்று மானபங்கம் செய்தது.

2. இராஜகுமாரி சற்று தூரமான பாத்தியதை முறையில் எனக்கு சகோதரி முறையினளாயிருக்கிறாள்.

3. நேபாள தேசத்தை ஆளும் ராஜ வம்சத்தைச் சார்ந்தவளாயுமிருக்கிறாள். ஜூரிகளாய் இருக்கப்பட்ட ஆங்கிலேய கனவான்கள் எனது இராஜ பக்தியையும், இராஜ விசுவாசத்தையும் அறிந்துகொள்ளக் கூடும்.

4. ஹிராலால், இராஜ குமாரியை விபசாரியென்றும், நேபாள ஸ்திரீகளுக்கு மானமும், கற்பும் கிடையாதெனவும் மிகவும் இழிவுபட பகிரங்கமாய்ச் சொன்னதும், எவருக்கும் பயப்படாமல் தனது வேலைகளைச் செய்தே வரப்போவதாயும், நேபாள நாய்களின் சத்தத்திற்குத் தான் கவனம் கொடுப்பதில்லை யென்றும் சொன்னதுமாகும்.

தான் செல்வந்தன் என்ற மமதையினால் அவன் தப்பித்துக் கொள்ளலாம் என்று மனோ ராஜ்யம் செய்து கொண்டிருந்தான். பணம் அநேக தீமைகளைச் செய்து வரக் கூடுமென்றாலும், ஒருவனுடைய உயிரைக் காக்க வல்ல சக்தி அதற்கில்லை யென்பதைமட்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் ஹிராலாலை அடித்தற்கு மற்றுமொரு காரணம் யாதென்றால்:— இராஜ குமாரியின் பரிதபிக்கத்தக்க நிலையும், நோய் வாய்க்குட்பட்டு துன்பம் அடைந்ததுமேயாகும். ஸ்ரீமான் கிரியுடனும், சில வேளைகளில் நான் தனிமையாகவும், இராஜ குமாரிக்கு மருந்து கொடுப்பதற்காகவும், சந்தோஷமும், ஆறுதல், உபசாரம் உள்ள வார்த்தைகளைச் சொல்வதற்காகவும் அவள் வியாதிப் படுக்கையில் இருக்கும்போது செல்வோம். அவ்வமயம் அவளின் பரிதபிக்கப்படத்தக்க நிலைமையை அறிந்தோம். இக் காரணங்களாலேயே நான் ஹிராலாலை அடித்தேன்.

என் மீது குற்றம் சாட்டும் பொருட்டு சில மாதங்களுக்கு முன் நான் ஹிராலால் வீட்டு முன் பக்கமாய்ச் சென்றதாகவும், லட்சம் ரூபாய் அவனிடம் பெற நான் முயன்றதாகவும் ஹிராலால் கூறினான். அவனுடைய பேர், வீடு எனக்குத் தெரியாது. அவனை நான் கண்டதுமில்லை ஆனால் என்னுடைய கையால் அடிபட்டு மாண்ட அன்று (பெப்ரவரி 26) தான் நான் அவனை முதன் முதலாகவும், இறுதியாகவும் கண்டேன்.

### நீதி நெறி முறையில் இது தகுதியே.

மேலே கூறப்பட்டதும், இன்னும் இவைபோன்ற விஷயாதிகளையும், காதால் கேட்டும், கண்ணால் பார்த்தும் வெறுமனே மௌனம் சாதித்துவிட என் மனம் எழவில்லை. ஆதலால் நான் ஹிராலால் விஷயமாய் அவ்வண்ணம் நடந்து கொண்டேன். இச்சம்பவத்தில் நான் எவ்வண்ணம் நடந்து கொண்டேன் என்பதை நிர்ணயிப்பது உங்களுடைய பொறுப்பேயாகும்.

நான் செய்த கருமம் நீதி நெறி முறையில் அந்த சன்மார்க்க வழியில் நிரபராதியாகிறேன். சட்டப்படியும் தவறாக மாட்டாது. அக்கிரமங்களை அடக்கவும், அக்கிரமம் செய்கிறவர்களைச் சிட்சிப்பதற்காகவும், பொது ஜனங்களையும், அவர்களுடைய சொத்துக்களைப் பராமரிப்பதற்காகவும் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்ற என் எண்ணம் உண்மையேயானால் அக்கிரமகாரர்கள் சிட்சிக்கப்பட வேண்டும். மங்கையரின் கற்புக்குப் பங்கம் வரா வண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தீச் செய்கையுடையோரின் நா சோரமும், ஒற்றுமையுடன் கூடிய செய்கையும், மற்றும் பிற விஷயங்களும், பொது ஜனங்களுக்கும், சர்க்காருக்கும் தெரிந்தேயிருக்க வேண்டும். சட்டம், அமைதி இவைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ஆங்கில சர்க்கார், தம் முன்னிலையிலேயே பிரஸ்தாப சம்பவங்கள் நடப்பதற்காக வெட்கப்பட வேண்டும்.

### தூக்கு மேடை ஏறத்தயார்.

சட்டம், நீதிநெறி இவ்விரு வழியிலும் நான் தவறு புரியவில்லையென்று எண்ணுகிறேன். நான் நேற்று ஹிராலாலை அடித்தவண்ணம் என்று கூறிய வண்ணம் இன்றும் கூறுகிறேன். ஆனால் தவறிழைக்கவில்லையென்றே நான் கூற முற்படுகிறேன். எனது சகோதரியின் கற்பு, பெருமை முதலியவற்றைக் காப்பது என் கடமையல்லவென்றும், எனது சகோதரிக்கு நேரிடும் துன்பங்களைப் பார்த்து நான் வாளா விருக்க வேண்டுமென்றும், ஹிராலாலைக் காட்டிலும் நான் பொது ஜனத்திற்கு மிகக் கொடுமையை விளைவிக்கக் கூடியவன் என்றும் நீதிபதியும், ஜூரிகளும் கருதுவார்களானாலும் அவைகளுக்கான வரதை நான் ஏற்கத்தயார். இதன் பொருட்டு எவ்வளவு அதிகத் தண்டனையை விதிக்க முடியுமோ அவ்வளவு தண்டனையையும் விதிக்கக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

'தூக்குமேடையில் ஏறி பரலோகத்திலுள்ள ஆண்டவன் முன்னிலையில் நின்று மங்கையரின் கற்பைக் காப்பாற்றவும், பெண்கள் நலம் பல பெறவும், புருஷர் வீரம் அடையவும், பெண்கள் "சக்தி"யின் அம்சமென்று அவர்களைக் கண்டு அக்கிரமக்காரர்கள் நடுங்கி மரியாதை செய்யும்படி பிரார்த்தனை செய்யவும் ஏற்படும் தினம் ஓர் சுபதினமாகும்" என்று சொல்லி முடித்தார்.

நீதிபதி ஜூரிகளுக்கு வழக்கின் சாராம்சத்தைத் தொகுத்துரைத்தார். ஜூரிகள் அனைவரும் "சிங்" கொலை செய்யவில்லையென்றும், அவர் மரணம் உண்டாகும் வண்ணம் காயத்தை உண்டாக்கினார் என்றும், மூவர் அவ்வண்ணம் இல்லையென்றும், பின்னும் பரிதபிக்கப்படத்தக்க காயத்தை உண்டாக்கினார் என்று அனைவரும் சொல்ல, நீதிபதி "சிங்" குக்கு எட்டு வருஷம் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

---


## மச்ச முனிவன் சரிதை.

இ ழ் ச் சி ந ல் கு ம் கி லை த

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

"பக்திரஸ மாலை" மலர் ஒன்று.

சங்கீத சாஹித்ய விற்பனர்களுக்கு நற்றருணம்!!!

பத்திரிகா நிருபரான ஆவரைகுளம் ஸ்ரீமான் ஞா. பா. வேதநாயக நாடார் அவர்களால சத்கதா காலக்ஷேபஞ் செய்வதற்கு ஏற்றவிதமாக தற்கால நாகரீக நாடகங்களின மெட்டுகளுடன் இயற்றப்பட்ட பக்திரஸ மாலை. இதில் மச்ச முனிவன் சரிதை முதன்மையாக ஆரம்பிக்கப்பட்டு பொருள், மோனை முதலியவைகளுடன் அற்புதக் கற்பித அதிசய மெட்டுகளில் இயற்றப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலஸ்ரீ மகாகனம் அஸரியா அத்தியக்ஷ குரு தீக்ஷிதரவர்கள் அரிய முகவுரையுடன் கூடியது. கொஞ்சக் காப்பிகளே அச்சிடப்படுவதால் ஆர்டருக்கு முந்துங்கள்! முந்துங்கள்!! விலை அணா நான்கு. (ஒரு புத்தகம் வேண்டுவோர் 5 அணா தபால் பில்லை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மூன்று புத்தகம் முதல் மேற்கொண்டு வேண்டுபவர்களுக்கு வி. பி. மூலம் அனுப்பகூடும்.

விலாசம்:—

"நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை.

ஞா. பா. வேதநாயகம் ஒய். எம். ஸி. ஏ. Y. M. C. A. கொழும்பு.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# பலதிரட்டு.

## ஞாபகச் சின்னம்.

1857-ம் வருஷத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து வீர முழக்கம் செய்த ராணி லக்ஷ்மியாயின் ஞாபகார்த்தமாக ஜான்சியில்கட்டப்பட்டகட்டடத்தைப் புதிப்பிப்பதற்காக நகர சபையார் ரூபாய் 5000 கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். ரூபாய் 50 ஆயிரம் செலவு செய்து புதிதாக ஒரு உருவச் சிலையையும் திறந்துவைக்க வேலை நடந்து வருகிறதாம்.

## புதிய பாடல்கள்.

சோழ நாட்டிலுள்ள திருவிடைவாய் என்ற க்ஷேத்திரத்தில் ஒரு கல் வெட்டிலிருந்து திருஞானசம்பந்தருடைய பாடல்கள் பதினொன்று புதிதாக அகப்பட்டிருக்கின்றனவாம்.

## புகையால் நேரும் மரணம்.

கல்கத்தாவில் ஏற்படும் மரணங்களில் ஐந்தில் ஒருபாகம் சுவாசக் கருவிகளில் ஏற்படும் வியாதிகளின் காரணமாயே உண்டாகிறதாம். ஏனெனில் வாய் மூக்கு முதலிய சுவாசாசயங்களில் தற்கால தீபங்களிலுண்டாகும் புகை போய் அடைவதால் தான் இவ்வித வியாதிகள் சம்பவிக்கின்றனவென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள்.

## ஜாதி விலக்குகள்.

வடக்கே ஹசரா என்ற ஊரில் கிருஷ்ணமோகன சக்கிரவர்த்தி என்பவர் நாம சூத்திரர் ஒருவர் வீட்டில் பகவத் கீதையை வாசித்த பாவத்திற்காக அவ்வூரார் அவரை ஜாதி விலக்கு செய்தனராம். தென் மலையாளம் கோட்டையம் என்ற நகரில் ஒரு நம்பூதிரி தனக்கேற்பட்ட காச நோய் தீருவதற்கு மருந்தாக மீன் எண்ணெயைச் சாப்பிட்ட பாபத்திற்காக அவரை சாதியை விட்டு விலக்கி விட்டார்களாம்.

## வழக்கத்திற்கும் வழக்கு.

பௌரிங்பேட்டையை அடுத்த கல்வி கிராமத்திலுள்ள குண்டம்மா என்ற விதவை சின்னாட்களுக்குமுன் தன் தலைமயிரை சிரைக்க மறுக்கவே, கட்டாயத்தின்மேல் வல்லூட்டியாக அவள் மாமி மைத்துனரும் முண்டனம் செய்து விட்டனர். இதன்மேல் கோலார் ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் அவளை வற்புறுத்திய குற்றத்திற்காக தலைக்கு ரூபாய் 100 வீதம் அபராதம் விதித்ததோடல்லாமல் கோர்ட்டு கலையும் வரை சிறைவாச தண்டனையும் விதித்தாராம்.

## யாத்திரை வாசியின் கதி.

யாத்திரையாகத் தன் குடும்ப சகிதமாய்ச் சென்ற ஒருவன் காசிக்குச் சமீபமாயுள்ள சாரநாதத்தில் பதினெறு வயதுள்ள தன் மகளையும், மனைவியையும் கொன்று விட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டானாம்.

## உயரமான மனுஷி.

18 வயதுடைய ஓர் ஐரோப்பிய மாது லண்டனிலிருக்கிறாள். இவள் வெளியில் வந்தால், ஜனக் கூட்டம் கூடிவிடுகிறதாம். காரணம் இவள் 8 அடி 1 அங்குலம் உயரம் வளர்ந்திருக்கிறாளாம்.

## காளைகளின் தீரம்.

ஒரு குடியானவன் பொள்ளாச்சிச் சந்தையினின்றும் ஒரு ஜோடி காளைகளுடனும், எழுநூறு ரூபாய்களுடனும், தெரிந்த மூவருடனும் தனதூருக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கும்போது இவனிடமுள்ள பணத்தை அபகரிக்கத் துணையாக வந்த மூவரும் ஒன்று சேர்ந்து ஒருவன் மாடுகளைப் பிடித்துக் கொண்டும், ஒருவன் குடியானவனைப் பிடித்துக் கொண்டும் மூன்றாமவன் குடியானவனைக் கொலை செய்யக் கத்தியைத் நீட்டிக்கொண்டுமிருந்தார்களாம். ஆண்டவன் குடியானவனின் திக்கதியைப் போக்க எண்ணியதேபோல், மாடுகள் இரண்டும் திமிறிக்கொண்டோடி கத்தி நீட்டியவனை ஒன்றும், தங்களைப் பிடித்துக்கொண்டிருந்தவனை மற்றொன்றுமாகக் கொம்புகளால் குத்திக் குற்றுயிராக்கிவிட்டன. குடியானவனைப் பிடித்திருந்தவனும் இவ்வித பயங்கரத்தைக் கண்டதும் விட்டு விட்டு ஓடிவிட்டனனாம்.

## மதுரையில் பிரேதம்.

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி ஆலயத்துள்ள பொற்றாமரைக் குளத்தில் 18-5-27-ல் 30 வயதுள்ள ஒரு ஸ்திரீயின் பிரேதம் மிதந்தது. காரணம் தெரியவில்லை.

## காகோரி கைதிகள்.

பெரில்லி, பதேகார், ஆக்ரா, நைனி இவ்விடங்களிலுள்ள கைதிகளைச் சரியானபடி சிறையில் நடத்தாததால் உண்ணா விரதம் 40 நாட்கள்வரை கொண்டிருந்தனர். மிகவும் மெலிந்து எலும்பும் தோலுமாக விருக்கின்றனர். உறவினர்களும் மிகுந்த பரிதாபப்படுகிறார்கள். இது விஷயத்தில் அனுதாபமுள்ளவர்களும் மிகவும் கவலையுற்றிருக்கிற நிலைமையில் பெரில்லியில் தன் மகனுடன் தானும் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வந்த தாயானவள் ஸ்மரணையற்றுப்போக அங்குள்ள அனைவரும் விரதத்தைக் கைவிட்டார்கள். இதைப்பார்த்து மற்ற ஊர்க் கைதிகளையும் திருப்பப்பட்டுவருகிறது.

## ஜப்பான் ஆலைகள்.

இந்தியாவில் இறக்குமதியாகும் ஆலைத் துணிகளுக்குக் காப்பு வரியை உயர்த்த சிபார்சு செய்யப்பட்டிருப்பதால் ஜப்பானியர்கள் இந்தியாவிலேயே ஆலைகள் ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறார்கள்.

## சிரத்தாநந்தர் கொலை வழக்கு.

சுவாமி சிரத்தாநந்தரவர்களைக் கொலை செய்து கீழ் கோர்ட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட அப்துல் ரஷித் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருந்தார். குயுக்தியான முறைகளோடு எவ்வளவோ வழக்காடியும் ஹைக்கோர்ட்டார் மரண தண்டனையை ஊர்ஜிதப்படுத்திவிட்டனர்.

## வங்காளக் கைதிகள்.

இம்மாதம் தேக அசௌக்கியம் காரணமாக விடுதலைசெய்யப்பட்ட ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸை மட்டுமன்றி அவஸர சட்டத்தின் கீழ் கைதியான இதர சிறையாளர்களையும் விடுதலை செய்ய நோக்கமாவென்று கேட்ட ஒரு கேள்விக்கு அவ்வித நோக்கம் கிடையாதென ஏர்ல்விண்டர்டன் காமன் சபையில் பதிலளித்தாராம்.

## மச்ச கன்னிகை.

மிஸ்டர் ஹாஸன்ஹாலேன் என்னுமொரு முகமதியர் மனித உருவமும் மச்ச (மீன்) உருவமும் ஒருங்கேயமையப்பெற்ற இரு பிராணிகளின் பிரேதங்களை சென்னைக்குச் சென்ற வாரம் காட்சிக்காகக் கொண்டு வந்திருக்கிறார். இவைகளில் ஒன்று ஆண்; மற்றொன்று பெண்; ஆண் பெரிதாயிருக்கிறது. 1905-ம் வருஷம் ஹாமரம் தீவுக் கருகாமையில் இவை உயிருடன் பிடிக்கப்பட்டனவாம்.

## டிராம் வண்டி ஆபத்து.

பர்லின் நகரிலுள்ள ஒரு குன்றில் நின்ற டிராம் வண்டியில் பிரேக்கை விளையாட்டாக ஒரு பையன் வேலை செய்ததால் டிரைவர் இல்லாத சமயத்தில் வண்டி திடீரெனப் புறப்பட்டு தண்டவாளத்தைவிட்டுக் கீழிறங்கி 9 பேர் மாண்டனர்.

ஜப்பானில் 846 தினசரிப்பத்திரிகைகளும் 338 வாரப்பத்திரிகைகளும் 3,729 மாதப் பத்திரிகைகளும் வெளிவருகின்றனவாம்.

* *

மண்ணெண்ணெய் விளக்கொன்று வெடித்ததனால் சௌரி எனுமிடத்திலுள்ள பிர்லாமில்லில் தீ மூண்டு 50000 ரூபாய்பெறுமானஎன்ஜின்களும் சக்கரங்களும் எரிந்து போயினவாம்.

# நீதிகள்.

உழைப்பு உவப்பாயிருக்கவேண்டும். தினந்தோறும் கிரமமாக நம்முடைய காரியங்களைச் செய்யவேண்டும். அப்படி செய்யும் காரியத்தினால் தான் சந்தோஷம் உண்டாகும். வேளையில் போஜனம் செய்யாமலும், ஓய்வு நாளில் உல்லாசமாயிராமலும், பண்டிகை நாட்களைப் பாழாக்கியும் செய்யும் காரியங்களால் பலனுண்டாகாது.

* *

டம்பனாயிருப்பவனை லக்ஷ்மி பரிகாசம் செய்கிறாள். பிராணனுள்ளவரையிலும் எவ்விஷயத்திலும் மிதமாயிருக்கவேண்டும்.

* *

சோம்பல், காமம், மிதமின்மை ஆகிய மூன்று துர்க்குணங்களுக்கு முக்கியமான காரணங்கள் மூன்று (1) குடி (2) வெறி (3) அறியாமை. இக் குற்றமான பாபகர்மங்களால் அநேகர் கெட்டு அழிந்து போகின்றனர்.

* *

அற்பக்காரியமானாலும் அதைப் பிறருக்கென்று செய்தால் அதி பெருமையுண்டு. எவ்வளவு அற்பமான காரியமானாலும் அதை கவனத்துடன் செய்யவேண்டும்.

* *

நல்ல பேச்சுக்கு நாலு அடையாளமுண்டு (1) உண்மை (2) அர்த்தபுஷ்டி (3) நயம் (4) சாதுரியம் இதில் முதல் மூன்று அடையாளங்களும் இருப்பது அவசியம். அவைகளை ஒருவன் கற்றுக் கொள்வது கஷ்டமில்லை. சாதுரியம் மட்டும் நல்ல புஸ்தகங்களைப் படிப்பதினாலும் பெரியோர்கள் (கூட்டுறவினாலும்) சகவாசத்தினாலும் வரவேண்டும்.

* *

கல்வி நம்மிடம் இயற்கையாயுள்ள சகல சக்திகளையும் விர்த்தி செய்கிறது. புஸ்தகசாலை கல்விச்சாலை முதலிய உபயோகமுள்ள விஷயங்களுக்குச் செலவழிக்கும் பணம் பிரயோஜனத்தைத்தரும் என்பதை கெட்டியாக நம்பு. படிப்பில் கவனமும் ஊக்கமும் உன் க்ஷேமத்திற்கு அவசியமானவை. பெரியோர்களின் அருமையான பொக்கிஷமே புஸ்தக ரூபமாயிருக்கிறது. நல்ல சிநேகிதர்களைத் தேடியடைதல்போல் நல்ல புஸ்தகங்களை நாடிப் படிப்பது நன்று.

* *

அவசரம் அநுகூலக்கெடுப்பதுடன் ஆளையும் கெடுக்கிறது. இதென்ன கஷ்டமென்று மனதில் எண்ணிக் கொண்டே ஓர் காரியத்தைச் செய்வது கெடுதலை உண்டுபண்ணும்.

* *

உண்டாகக்கூடிய அபாயத்தை அலக்ஷியம் செய்வது தைரியமன்று. அதைத்தடுக்கஎத்தனிப்பதும், ஆபத்து வந்துவிட்டால் அனுபவித்து ஒழிக்கத் தயாராயிருப்பதும் தைரியமாகும்.

* *

ஒவ்வொரு மனிதனிடமுமுள்ள துர்க்குணத்தைப் பாராமல் நற்குணத்தைமட்டும் கிரகித்துக் கொள்ளுவதும் பணத்தைவிட தைரியம், பலம், நம்பிக்கை ஆகிய இக்குணங்களிருப்பதுமே மேன்மை.

* *

கஷ்டமும் துக்கமும் மாறவேஷம் பூண்ட நண்பர்கள். இப்படியக்கற்றுக் கொண்டால் அதிகாரம் செய்யத் தானே வந்துவிடும். உற்சாகமே நன்னடக்கையின் அறிகுறி.

# சமத்துவமே

# சுயராஜ்யம்.

புத்திர சந்தான எண்ணெய்.



ஸ்திரீகளின் கர்ப்பஸ்தானத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது விதலைப் புசித்து வருவதினாலும் மற்றும் பல காரணத்தினாலும் கர்ப்பஸ்தானத்தில் சதை வளர்ந்து சொரிபற்றி இரத்தங்கட்டியிருந்தாலும் மூலச் சுழியில் வாய்வு பித்தம் தங்கினாலும் கருத்தரிக்காது. இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டு நக்கிச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் கர்ப்பஸ்தானத்திலிருக்கும் ஆறுவித குற்றங்களையும் நீக்கி சுத்தப்படுத்தி மறுமாதத்திலேயே கர்ப்பந்தரிக்கும். சிலருக்கு கருத்தரித்து 2-3-4 மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்து போவதுமுண்டு. இப்பேர்க்கொத்த கெர்ப்ப தோஷமெல்லாம் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருத்தரிக்கும். புட்டி 1-க்கு ரூ 2.

கேட்லாக் இனாம்.

விலாசம்:-

என். வி. கோபால் மேடிகல் ஹால்.,

37. திருப்பள்ளி செருவு, சௌக்கார்பேட்டை, மதராஸ்.

மேகநிவாரணி

சஞ்சீவிஎண்ணெ

(மேக ரோகங்களுக்கு கைகண்ட ஔஷதம்.)

இம்மேக எண்ணெயானது சுமார் 50-வருஷங்களுக்கு முன் ஒரு பெருத்த மஹானால் தயார் செய்யப்பட்டது. இந்த ஔஷதத்தினால் அநேக தீயருநும் வியாதியஸ்தர்கள் எளிதில் சுகமடைந்திருக்கிறார்கள். தற்சமயம் பொதுஜன சௌகரியத்திற்காக இங்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

நீக்கும் வியாதிகள்:...மேகப்புடைகள். மேகஊரல், பவுத்திரங்கள், சொறி, தேமல், சிரங்கு, படர்தாமரை, கண்டமாலை, குதகவாய்வு, பாரிசவாய்வு, கைகால்முடக்கு, கைகால் வீக்கம், விரைவாதம், நீர்வியாதி, வெள்ளை, இடுப்புவலி, ஆறாசபுண்கள், மஞ்சள் காமாலை, தலைநோய், ஜ்வரம், வயிற்றில் ஜ்வரக்கட்டி, ஸ்திரீ சம்மந்தப்பட்ட சகலரோகங்கள் முதலிய வியாதிகள் நீங்கி ரத்தம் சுத்தியாகி யாவரும் ஆச்சரியப்படும்படியாய் தேக பலமும், முகவசீகரமும் புத்திர சந்தானமும் உண்டாகும். உபயோகிக்கும் விதம் புட்டியுடன் காணலாம். இவை வீண போலி விளம்பரம் என்று நினைக்கவேண்டாம்.

காலப்பட்ட வியாதிகளுக்கு 5 நாள் எண்ணெய் ரூபாய் 3

சாதாரண வியாதிகளுக்கு 3 நாள் எண்ணெய் ரூபாய் 2

சென்னை ராஜதானிக்கு சோல் ஏஜெண்டுகள்,

ஆர். கே. பிரீடம் அண்டு கோ,

1/25 முல்லா சாயபு:தெரு.

சௌக்கார்பேட்டை, மதராஸ்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection